## 32

# "அவர் அநேக விஷயங்களை உவமைகளாக . . . சொன்னார்"

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #12*

V. *இரண்டாம் பஸ்காவில் இருந்து மூன்றாம் பஸ்கா வரை (தொடர்ச்சி).*

O. *உவமைகளின் முதல் மாபெரும் தொகுப்பு.*

1. *நிகழ்வுவேளையும் அமைவும் (மத். 13:1-3; மாற். 4:1, 2; லூக். 8:4).*
2. *விதைப்பவன் உவமையும் விளக்கமும் (மத். 13:3-23; மாற். 4:3-25; லூக். 8:5-18).*
3. *மறைவான வளர்ச்சியின் உவமை (மாற். 4:26-29).*
4. *களைகளின் உவமை (மத். 13:24-30).*
5. *கடுகு விதை, புளித்தமா ஆகியவற்றின் உவமைகள் (மத். 13:31-35; மாற். 4:30-34).*
6. *களைகளின் உவமை விளக்கப்படுதல் (மத். 13:36-43).*
7. *பொக்கிஷம், முத்து ஆகியவற்றின் உவமைகள் (மத். 13:44-46).*
8. *மீன்பிடி வலையின் உவமை (மத். 13:47-53).*

### அறிமுகம்

*முந்திய பாடத்தில் நாம், "ஒரு மும்முரமான நாள்" என்று அழைக்கப்பட்ட நாளைப் பற்றிய ஆய்வு ஒன்றைத் தொடங்கினோம். இயேசு சாத்தானுடைய வல்லமையினால் அசுத்த ஆவிகளைத் துரத்தினார் என்ற பரிசேயர்களின் குற்றச்சாட்டு அந்த நாளின் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாக இருந்தது. அதைத்தொடர்ந்து வந்த எதிர்கொள்ளுதலானது கிறிஸ்துவின் ஊழியத்தில் ஒரு திருப்புமுனையைக் குறிப்பிட்டது. இயேசு தமது பிரசங்க பாணியை மாற்றிக்கொண்டார் என்பது ஒரு விளைவாயிருந்தது: அவரது வெளிப்படையான போதனையானது அதிகம் அதிகமாக உவமைகளின் மூலமாகச் செய்யப்பட்டது (மத். 13:34, 35; மாற். 4:33, 34). கலிலேயாக் கடலின் குறுக்கே இயேசு பின்வாங்கிச் சென்றது*

*என்பது இன்னொரு விளைவாயிருந்தது (மாற். 4:33, 35). கடல் பயணம் பற்றி நாம் நமது அடுத்த பாடத்தில் படிப்போம். இந்தப் பாடத்தில் நாம், கர்த்தருடைய "உவமைகளின் முதல் மாபெரும் தொகுப்பின்"மீது நமது கவனத்தைச் செலுத்துவோம்.*[1]

*முந்திய பாடமானது, இயேசுவின் தாயும் சகோதரர்களும் அவரைக் காண்பதற்கு வந்த வரலாற்றுடன் முடிந்தது (மத். 12:46-50). அதைத் தொடர்ந்து, கிறிஸ்து தாம் போதித்துக் கொண்டிருந்த வீட்டை விட்டுப் புறப்பட்டு, தமக்குப் பிரியமான இடங்களின் ஒன்றான கலிலேயாவின் கடற்கரைக்குச் சென்றார் (மத். 13:1; மாற். 4:1). வழக்கம்போல், அவரது உரையைக் கேட்பதற்கு மக்கள் எல்லா இடங்களிலும் இருந்து அங்கு வந்தார்கள் (லூக். 8:4), அவர் மீண்டும் ஒருமுறை படகில் இருந்தபடியே கரையில் இருந்த மக்களை நோக்கிப் பேசும்படி கட்டாயப்படுத்தப்பட்டார் (மத். 13:2; மாற். 4:1).*

*சூழ்நிலை பழக்கமானதாக இருக்கலாம், ஆனால் அவரது பிரசங்கம் அவ்வாறானதாக இருக்கவில்லை: அது கதைகளின் வரிசைத்தொடர் ஒன்றைக் கொண்டிருந்தது - அவை யாவும் சிறியவைகளாக, அவற்றில் சில மிகவும் சிறியவைகளாக இருந்தன. "அவர் அநேக விஷயங்களை உவமை களாக அவர்களுக்குச் சொன்னார்'' (மத். 13:3அ; மாற். 4:2அ-வைக் காணவும்).*

*இயேசு இதற்கு முன்னும் உவமைகளைப் பயன்படுத்தியிருந்தார். மலைப் பிரசங்கம் பற்றிய லூக்கா சுவிசேஷ விவரத்தில், பார்வையற்றவர் பார்வையற்றவரை நடத்திச் செல்லுதல் பற்றி கிறிஸ்து "ஒரு உவமையைப் பேசினார்" என்று கூறப்படுகிறது (லூக். 6:39). பரிசேயரான சீமோனுடன் இயேசு உணவு உட்கொண்ட வேளையில், அவர் இரு கடன்காரர்கள் பற்றிய உவமையைக் கொடுத்தார் (லூக். 7:41, 42).*[2] *ஏழு அசுத்த ஆவிகள் பற்றிய அவரது விவரிப்பை ஒரு உவமையாகவே பலர் வகைப்படுத்து கின்றார்கள் (லூக். 11:24-26).*[3] *கிறிஸ்து உவமைகளின் பயன்பாட்டை விரிவாகவும் தனிப்பட்ட வகையில் முழுமையாகவும் பயன்படுத்தினார் என்பதே இவ்வேளையின் வேறுபாடாக இருந்தது. மத்தேயு, "இவைகளை யெல்லாம் இயேசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார். உவமைகளினாலேயன்றி, அவர்களோடே பேசவில்லை"*[4] *என்று எழுதினார் (மத். 13:34; மாற். 4:33, 34ஐக் காணவும்). அவரது போதனையை விவரிப் பதற்கு உவமையைப் பயன்படுத்துதல் என்பதற்குப் பதிலாக, உவமைகள் என்பவை அவரது போதனையின் கருவியாயின.*

*இயேசுவின் ஊழியத்தின் எஞ்சிய பகுதியில் உவமைகள் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக ஆனதால், நாம் உவமைகளைப் பற்றிப் பொதுவாகக் கலந்துரையாடுதல் அவசியமாகிறது. பின்பு நாம் ''ஒரு மும்முரமான நாளில்" கிறிஸ்துவால் உரைக்கப்பட்ட பத்து அல்லது அதற்கு ஏறக்குறைய இருந்த உவமைகளைச் சுருக்கமாகக் கவனிப்போம்.*

# உவமைகள்: ஒரு விளக்கம்
# (மத். 13:10-17; மாற். 4:10-13, 21-25; லூக். 8:9, 10, 16-18)

*இயேசு ஒருவர் மாத்திரமே உவமைகளைப் பயன்படுத்திய பிரசங்கியாராக இருந்ததில்லை. உவமைகள் என்பவை பழைய ஏற்பாட்டுப் பேச்சாளர்களின் செய்தித் தொகுப்புகளின் அங்கமாக இருந்தன (சங். 78:2;[5] எசே. 17:2; 20:49; 24:3; ஓசியா 12:10). இருப்பினும், "உவமைகளைப் பயன்படுத்துவதில் குறிப்பிடத்தக்க அளவு தனிச்சிறப்பானவராக வரலாற்றில் கூறப்படும் ஒரே போதகராக உள்ளவர் இயேசு மட்டுமே."[6] உவமைகளைப் பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் நாம் எவ்வித மாறுபாடும் இன்றி அவரைப் பற்றியே நினைக்கின்றோம்.*

F. *லாகார்டு ஸ்மித் அவர்கள், "மாபெரும் போதகர் என்ற வகையில் இயேசு தமது சீஷர்களுக்கு அறிவுறுத்த எண்ணற்ற முறைகளைப் பயன்படுத்துகின்றார் ... ஆயினும் இந்த முறைகள் எல்லாவற்றிலும் மிகவும் ஆர்வத்திற்குரியதும் தனிச்சிறந்த போதனை வகையாக இருப்பதும் அவர் உவமைகளைப் பயன்படுத்துதல் என்பதாகவே இருக்கலாம்" என்று எழுதினார்.*[7] H. I. *ஹெஸ்டர் அவர்கள், "இயேசுவின் உவமைகள் இலக்கிய நயத்தில் இணையற்றவைகளாக உள்ளன: 'அவைகள் உலகத்தின் இலக்கியக் கலைகளில் மிகுந்த நேர்த்தியானவைகளாக, எளிமையுடன் தொகுக்கபட்டவைகளாக, ஆழ்ந்தறிவுள்ள சிந்தனை உடையவைகளாக, உணர்வில் ஆரம்பத்தன்மையும் ஆவிக்குரிய வகையில் வலிவார்ந்த தன்மையும் உடையவைகளாக இருக்கின்றன' " என்று கூறினார்.*[8]

### *உவமைகள்: என்ன?*

*"உவமை" என்ற வார்த்தையானது "உடன்" என்று அர்த்தப்படும் கிரேக்க முன்னிடைச் சொல்லுடன் (para) "எறிதல்" என்று அர்த்தப்படும் கிரேக்கப் பெயர்ச் சொல்லை (ballo) இணைத்துப் பெற்ற கிரேக்கக் கூட்டுச் சொல்லில் (parabole) இருந்து வருகிறது. இது உண்மையில் "உடன் எறியப்பட்ட பொருள்" என்று அர்த்தப்படுகிறது. இது* "parallel" *(இணை) என்ற வார்த்தையுடன் தொடர்புபட்டுள்ளது, இதனை இரு இணைகோடுகள் வரைவதன் மூலம் விவரிக்க முடியும்:*

*ஒரு உவமையில், (கூறப்பட்ட) ஒரு எடுத்துரைப்பு அல்லது கதையானது (வழக்கமாகப் பேசப்படாத) ஆவிக்குரிய "சத்தியத்துடன் எறியப்படுகிறது." அந்த எடுத்துரைப்பு அல்லது கதை என்பது மிகவும் எளிமையானதாக இருந்தது, ஆனால் தனிச்சிறப்பு வாய்ந்த, ஆழ்ந்தறிவுள்ள சத்தியத்தைப் போதித்தல் என்பதே அதன் நோக்கமாக இருந்தது. இந்த இணைவியமானது பின்வருமாறு விவரிக்கப்படக்கூடும்:*

*பேசப்பட்ட எடுத்துரைப்பு அல்லது கதை*

---

---

*பேசப்படாத ஆவிக்குரிய சத்தியம்*

*வசனத்தை முறையாகப் புரிந்துகொள்ளுதல் பற்றிய சில புத்தகங்களில்,[9] "விரிவாக்கப்பட்ட இருபொருள் உவமை"[10] என்பது உவமையின் நுட்பக் கருத்தான விளக்கமாக உள்ளது. ஒரு இருபொருள் உவமை* simile *("SIM-uh-lee" என்று உச்சரிக்கப்படுகிறது) என்பது "போல" அல்லது "இப்படிப்பட்ட" என்ற வார்த்தையைப் பொதுவாகப் பயன்படுத்துகிற ஒப்பீட்டை ஏற்படுத்தும் பேச்சின் உருவகமாக உள்ளது. "நரியைப் போலத் தந்திரம்" மற்றும் "இரத்தம் போலச் சிகப்பு" என்பவை இருபொருள் உவமைகளாகும். சில உவமைகள் இந்த விளக்கத்திற்குள் பொருந்துகின்றன; ஆனால் புதிய ஏற்பாட்டில், இச்சொற்றொடரானது இவ்வழி முறையில் கட்டுப்படுத்தப்படுவதில்லை. சில உவமைகள் "போல" "வாறு" அல்லது இதைப் போன்ற மற்ற சொற்களுடன் அறிமுகப்படுத்தப்படுகின்றன (மத். 13:31, 33, 44, 45), ஆனால் எல்லா உவமைகளும் இவ்வாறு அறிமுகப் படுத்தப்படுவதில்லை (மத். 13:3; லூக். 7:41, 42ஐக் காணவும்). மற்றும், சில வேளைகளில் உவமைகள் வார்த்தையின் எந்தக் கருத்தறிவிலும் விரிவாக்கப் படாமல், மிகவும் சுருக்கமாக்கப்பட்டுள்ளன (லூக். 6:39).*

*உவமையானது, "பரலோக அர்த்தம் கொண்ட பூலோகக் கதை" என்றும் அழைக்கப்பட்டுள்ளது. இது நல்ல சமாரியன் (லூக். 10:30-37) மற்றும் காணாமற்போன மகன் (லூக். 15:11-32) போன்ற நன்கு அறியப்பட்டுள்ள உவமைகள் சிலவற்றிற்குப் பொருந்துகிறது, ஆனால் சில உவமைகளைக் கதைகள் என்ற வகைப்படுத்துதல் கடினமானதாக இருக்கும் (லூக். 6:39; 8:16ஐக் காணவும்).*

*இயேசுவின் உவமை பற்றிய மாறுபட்ட பட்டியல்களைப் பரிசோதியுங்கள், அப்போது நீங்கள் இருபொருள் உவமை, ஒப்புவமை, உவமைக் கதை அல்லது பேச்சின் பிற ஒப்பீட்டு உருவகங்களாக வகைப்படுத்தக் கூடிய வசனப் பகுதிகளைக் கண்டறிவீர்கள். சில வேளைகளில் உவமைகள், நாம் வழக்கமாக விவரிப்புகள் என்று அழைப்பவைகளாக உள்ளன.[11] லூக்கா 4:23ல் கிறிஸ்து ஒரு பழமொழியை உவமை என்று குறிப்பிட்டார்.[12] ஆகையால், புதிய ஏற்பாட்டு உவமையை, ஏறக்குறைய நன்கு பழக்கப்பட்ட சூழ்நிலைக்கும்[13] பழக்கப்படாத ஆவிக்குரிய சத்தியத்திற்கும் இடையில் கொண்டு வரப்படுகிற ஒப்பீடு என்று எளிமையாய் நினைத்தல் மிகச் சிறந்ததாக உள்ளது. முதலாவதானது பொதுவாக எடுத்துரைக்கப்படுகிறது, இரண்டாவதானது பொதுவாக எடுத்துரைக்கப்படாமல் மறைவாக உணர்த்தப்படுகிறது.*

***உவமைகள்: ஏன்?***

*இந்த வேளையில் இயேசு உவமைகளை மிக விரிவாகப் பயன்*

*படுத்தியது சீஷர்களைத் திகைக்கச் செய்தது. அவர் அவற்றைக் கூறி முடித்தபின்பு, அவர்கள் தனியாக அவரிடத்தில் வந்து, "ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர்?" என்று கேட்டார்கள் (மத். 13:10). கிறிஸ்து ஏன் உவமைகளைப் பயன்படுத்தினார்?*

*முதலாவது, அவர் திறந்த மனமுள்ளவர்களுக்கு சத்தியத்தை வெளிப் படுத்த உவமைகளைப் பயன்படுத்தினார். சட்டப்படி, நாம் உவமைகளின் நோக்கத்தை ஆழ்ந்து சிந்திக்கையில், முதலில் நாம் அவற்றின் நேர்மறையான மதிப்பையே நினைத்துப் பார்க்கின்றோம்:*

- *உவமைகள் நமது கவனத்தைக் கவர்கின்றன: ஏறக்குறைய எல்லாருமே கதையை விரும்புகின்றோம்.*
- *உவமைகள் நமது சிந்தனையைத் தூண்டுகின்றன: அவைகள் நம்மை, "இது எதனை அர்த்தப்படுத்துகிறது?" என்று கேட்க வைக்கின்றன.*
- *உவமைகள் நமது புரிந்துகொள்ளுதலை ஒளியூட்டுகின்றன: அவைகள், புரிந்துகொள்ளக் கடினமான கொள்கைகளை விவரிக்கின்றன.*
- *உவமைகள் நமது ஞாபகத் திறனை வளப்படுத்துகின்றன: அவைகள் நினைவில் வைத்துக் கொள்வதற்குச் சுலபமானவைகளாக உள்ளன.*

*உவமைகள், ஆவிக்குரிய கருத்துக்களை நாம் புரிந்துகொள்ளவும் மதிக்கவும் உதவுகின்றன. சந்தேகத்திற்கு இடமின்றி, அவைகள் இயேசுவின் சீஷர்களுக்கும் உதவின. கிறிஸ்து ஞானமுள்ள போதகரை, "தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக் கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு" ஒப்பிட்டார் (மத். 13:52). உவமைகள் என்பவை, பழமையான சத்தியத்தைப் போதிக்கும் புதிய வழிமுறையாக இருந்தன.*

*இரண்டாவது, மூடலான [ஏற்றுக்கொள்ளாத] மனமுள்ளவர்களுக்குச் சத்தியத்தை மறைப்பதற்காக உவமைகளைப் பயன்படுத்தினார். இயேசு ஏன் உவமைகளில் பேசினார் என்று அவரது சீஷர்கள் அவரிடத்தில் கேட்டபோது, அவர் நேர்மறையான கருத்தின்மீதல்ல, ஆனால் எதிர்மறை யான கருத்தின்மீதே கவனம் செலுத்தினார். அவர், "அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும் உணர்ந்துகொள்ளாத வர்களாயும் இருக்கிறபடியினால், நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன்" என்றார் (மத். 13:13). அவர் ஏசாயாவின் கூற்றை மேற்கோள் காண்பித்தார்: "... அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள்" (மத். 13:15; ஏசா. 6:10ஐக் காணவும்).*

*நீங்கள் இந்த வார்த்தைகளை வாசிக்கையில், சந்தர்ப்பப் பொருளைச் சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள்: இயேசு பெயல்செபூலின் வல்லமையால் அசுத்த ஆவியைத் துரத்தினார் என்று குற்றம் சாட்டியதினால், பரிசேயர்கள் தங்கள் இருதயங்கள் பழுது பார்க்க இயலாத வகையில் கடினப்பட்டுக் கிடந்ததைச் செயல்விளக்கப்படுத்தினார்கள். அவர்கள் சத்தியத்தைக் கற்றுக்கொள்வதற்கல்ல ஆனால் இயேசுவை அகப்படுத்தச் சில வழிவகைகளைக்*

*கண்டறிவதற்காகவே அவர் உரைத்தவற்றைக் கவனித்தார்கள் என்பது தெளிவாயிருந்தது. பகையுணர்வு மிகுந்திருந்த இந்தச் சூழலில் இயேசு "கதைகளை" - கற்றுக்கொள்ள மனவிருப்பமற்றவர்களுக்கு மதியீனமான வைகளாகத் தோன்றிய கதைகள், ஆனால் அவற்றின் அர்த்தத்தைக் கண்டுபிடிக்க நேரம் எடுத்துக்கொள்ள விரும்பியவர்களின் இருதயங்களை ஒளியூட்டிய கதைகளை - கூறத் தொடங்கினார் (மத். 13:16, 17).*

*உவமைகள் இவ்விதமாக நேர்மையான இருதயங்களிலிருந்து கடினமான இருதயங்களைப் பிரித்தன. ஒரு வகையில், மூடப்பட்ட சிந்தையுள்ளவர்களுக்கு அவைகள் ஒரு நியாயத்தீர்ப்பாய் இருந்தன.*

***உவமைகள்: எவ்வாறு?***

*கிறிஸ்துவின் உபதேச ஊழியம் பற்றிய நமது படிப்பில் உவமைகள் பெரிய பெரிய பங்கினைச் செயலாற்றும் என்பதால், இவற்றை எவ்வாறு விளக்கப்படுத்துவது என்பது பற்றி நாம் ஒரு சில வார்த்தைகளைக் கூறவேண்டும்?*

*வேதாகமத்தில் உள்ள பேச்சு உருவகங்களை விளக்கப்படுத்துவதற்கான பொதுவான செயல்முறை மூன்று படிநிலைகளைக் கொண்டுள்ளது: (1) உருவகத்தைப் புரிந்துகொள்ளுதல்; (2) அது எடுத்துரைக்கும் வேதாகம சத்தியத்தை உறுதிப்படுத்துதல்; (3) இவ்விரண்டும் பொதுவில் கொண்டுள்ளது என்ன என்பதைத் தீர்மானித்தல். உவமைகள் பற்றிய படிப்பிற்கு, பின்வரும் படிநிலைகள் தழுவிக்கொள்ளப்படலாம்: (1) கதையைப் பற்றி அல்லது இயேசு ஏற்படுத்திய கூற்றைப் பற்றி உங்களால் இயன்ற பின்னணி யாவற்றையும் கண்டறியுங்கள். காட்சியமைப்பானது அவர் கூறியதை முதன் முதலில் கேட்டவர்களுக்குப் பழக்கமானதாக இருந்திருக்கலாம், ஆனால் சில காட்சியமைவுகள் இன்றைய நாட்களில் நமக்குப் பழக்கமற்றவையாக உள்ளன. (2) போதிக்கப்படும் அடிப்படை சத்தியத்தைத் தீர்மானிக்க முயற்சி செய்யுங்கள். அவ்வப்போது இயேசு உவமையை விவரமாக விளக்கியிருந்தார் (மத். 13:18-23, 36-43). சில வேளைகளில் அவர் உவமையைத் தொடர்ந்து ஒரு நடைமுறைப் பயன்பாட்டையும் விளக்கப்படுத்தினார் (லூக். 7:42ஆ-47; 10:29, 36, 37; 12:40). சந்தர்ப்பப் பொருளானது உவமையின் செய்திக்கு குறிப்பொன்றைப் பெரும்பாலும் அளிக்கிறது (லூக். 15:1-3; 18:1). சிலவேளைகளில் கிறிஸ்துவின் ராஜ்யத்தினுடைய சத்தியங்களைப் பற்றிய பொதுவான அறிவு மாத்திரமே நீங்கள் கொண்டுள்ள உதவியாக உள்ளது. (3) கடைசியாக, உவமையானது அடிப்படை சத்தியத்தின்மீது எவ்வாறு வெளிச்சம் வீசுகிறது என்பதைக் காண்பதற்கு உவமையையும் சத்தியத்தையும் பக்கம் பக்கமாக வையுங்கள்.*

*மூன்றாவது படிநிலையின் தொடர்பாக, விதிப்படி ஒவ்வொரு உவமையிலும் மையக்கருத்தான சத்தியம் ஒன்று வலியுறுத்தப்படுவதைப் புரிந்துகொள்ள வேண்டும். இதற்கு விதிவிலக்குகள் உள்ளன (இப்பாடத்தின் பிற்பகுதியில் இரண்டு விதிவிலக்குகளை நாம் ஆராய் வோம்), ஆனால், ஒரு உவமையை நாம் அளவுக்கு அதிகமாக விளக்கி யுரைத்து ஒவ்வொரு சிறு விவரத்திற்கும் ஒரு அர்த்தம் உள்ளதென்று கருத்து*

ஏற்படுத்துவதைக் குறித்து ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.[14] எடுத்துக்காட்டாக, இந்தப் பாடத்தில் படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகளில் ஒரு நிலத்தில் புதையுண்டிருந்த பொக்கிஷத்தைப் பெறுவதற்காக அந்த நிலத்தை வாங்கிய மனிதன் பற்றிய உவமை உள்ளடங்குகிறது (மத். 13:44). ராஜ்யம் மதிப்புமிக்கது என்பதே அவ்வுவமையின் கருத்தாக உள்ளதே தவிர, நாம் அந்த மனிதனின் செயல்களை (அவைகள் சந்தேகத்தை எழுப்பக் கூடியவைகள்) போலச் செய்ய வேண்டும் என்பது இங்கு கருத்தல்ல. முன்பு நாம் இரண்டு கடன்காரர்கள் பற்றிய உவமையைப் படித்து, தேவன் அந்த நாட்களில் இருந்த இரக்கமற்ற கடன்கொடுப்பவர்களுடன் ஒப்பிடப்படக் கூடாது என்று வலியுறுத்தினோம். நாம் பிற்பாடு படிக்கவிருக்கும் வசனப்பகுதிகளில் இருந்து இன்னும் இரண்டு விவரிப்புகளை ஆழ்ந்து சிந்தியுங்கள்: நாம் ஒவ்வொரு விவரத்தையும் "பொருத்தப்படுத்த" முயற்சி செய்தால், லூக்கா 12:39, 40ல் இயேசுவின் வார்த்தைகள், அவர் ஒரு திருடராய் இருக்கின்றார் என்று கருத்துத் தெரிவிப்பதாக இருக்கும், மற்றும் லூக்கா 18:1-6ல் உள்ள உவமையானது தேவனை ஒரு அநீதியான நியாயாதிபதி என்று பெயரிடுவதாயிருக்கும்.

உவமைகளை விளக்கப்படுத்துவதற்கு இன்னும் ஒரு சில பொதுவான கொள்கைகள் புரிந்து கொள்ளப்பட வேண்டும். (1) பெரும்பாலான உவமைகள் "ராஜ்யத்தின்" உவமைகளாக உள்ளன (மத். 13:24, 31, 33, 44, 45, 47ஐக் காணவும்). அவைகள், ராஜ்யத்தில்/சபையில் உள்ள குடிமக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது உட்பட ராஜ்யத்தின் அம்சங்கள் சிலவற்றை வெளிப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருந்தன.[15] (2) இரண்டு உவமைகள் ஒரே விவரங்களைக் கொண்டிருக்கையில், அவ்விவரங்கள் இரு உவமைகளிலும் ஒரே விதமாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. எடுத்துக்காட்டாக, விதைப்பவன் உவமையில், "விதை தேவனுடைய வசனமாக உள்ளது" (லூக். 8:11), அதே வேளையில் களைகளின் உவமையில், விதைகள் என்பவை "ராஜ்யத்தின் புத்திரர்களாக" உள்ளார்கள் (மத். 13:38). (3) உவமைகள் என்பவை பேச்சு உருவகங்களாக இருப்பதால், அவை அடிப்படையில் புதிய சத்தியத்தை வெளிப்படுத்துவதற்கு மாறாக சத்தியத்தை விளக்கப்படுத்துகின்றன. ஆகையால் ஒருவர், "ஒரே ஒரு உவமையை மட்டும் வைத்துக்கொண்டு மார்க்க உபதேசத்தை நிரூபிக்கத் தயங்க வேண்டும்."[16]

உவமைகளின் மீதான பின்னணிக்கு அது போதுமானதாக உள்ளது. இப்போது நாம் ''மும்முரமான நாளில்'' இயேசுவால் பேசப்பட்ட உவமைகளைக் கண்ணோக்குவோம்.

## உவமைகள்: உதாரணங்கள்
## (மத். 13:3-9, 18-33, 36-50; மாற். 4:3-9, 14-20, 26-32; லூக். 8:5-8, 11-15)

அந்த நாளில் (மாற். 4:2) பேசப்பட்ட எல்லா உவமைகளைப் பற்றிய

*பதிவேடு நமக்கு உள்ளதா என்று நாம் அறிவதில்லை, ஆனால் மத்தேயு குறைந்தபட்சம் ஒன்பது உவமைகளைக் கூறியுள்ளார். மாற்குவும் மத்தேயு குறிப்பிட்ட எல்லா உவமைகளையும் குறிப்பிட்டு, அத்துடன் மத்தேயு பதிவு செய்திராத ஒரு உவமையையும் குறிப்பிட்டுள்ளார். லூக்கா சுவிசேஷத்தில் ஒரே ஒரு உவமை மாத்திரமே காணப்படுகிறது: விதைப்பவன் உவமை.*

***விதைப்பவன் உவமை (மத். 13:3-9, 18-23; மாற். 4:3-9, 14-20; லூக். 8:5-8, 11-15)***

*விதைப்பவன் உவமையின் முக்கியத்துவத்தின் காரணமாக அது ஒப்பீட்டு சுவிசேஷங்கள் மூன்றிலும் காணப்படுகிறது. இயேசு தமது சீஷர்கள் இந்த உவமையைப் புரிந்துகொள்ள முடியாதென்றால், அவர்களால் வேறு எந்த உவமையையும் புரிந்துகொள்ள முடியாது என்றார் (மாற். 4:13). இது எல்லா உவமைகளுக்கும் ஒரு திறவுகோலை அளிக்கிறது:[17] இது உவமைகள் ஏன் அவசியமாயிருந்தன என்பதைப் புரிந்துகொள் வதற்கான திறவுகோலாக இருந்தது. இயேசுவின் உரையைக் கேட்க வந்திருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் இல்லையென்றாலும், பலர் கடினப்பட்ட, ஆழமற்ற அல்லது பிரிவுபட்ட இருதயங்களைக் கொண்டிருந் தார்கள். குறிப்பிட்ட இந்த உவமையானது, உவமைகளைப் பொதுவாகப் புரிந்துகொள்வதற்கான ஒரு திறவுகோலையும் அளித்தது. கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் இந்தக் கதையை விளக்குவது எவ்வாறு என்பதைக் கற்றுக்கொள்ளுதலானது, மற்ற உவமைகளை விளக்கப்படுத்த அவர்களுக்கு உதவும். விதைப்பவன் உவமை பின்தொடரும் பிரசங்கத்தின் விரிவாக ஆராயப்படும், ஆனால் இவ்வேளையில் ஒரு சில விளக்கங்களை முறைப்படி தருதல் என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது.*

*கடலோரத்தில் இயேசு தமது போதனையை, நான்கு வகையான நிலங்களைப் பற்றிக் கூறுதலின் மூலம் தொடங்கினார்: வழியோர[18] நிலம், பாறை நிலம், முட்புதரான நிலம் மற்றும் நல்ல நிலம்.[19] அவர் இதைக் கூறி முடித்தபின்பு,[20] அவர்கள் தனிமையில் இருந்த வேளையில், அவரது சீஷர்கள் அவரிடத்தில், அந்த உவமை எதை அர்த்தப்படுத்திற்று என்று கேட்டார்கள் (மாற். 4:10; லூக். 8:9).[21] அவர், நிலத்தின் வகை ஒவ்வொன்றும், வசனத்தைக் கேட்பதில் எவ்வகையான செயல்விளைவை ஏற்படுத்தும் என்பதைப் பாதிக்கின்ற இருதயத்தின் சூழ்நிலையொன்றைக் குறித்தது என்று விளக்கம் தந்தார். ‘‘உண்மையும் நன்மையுமான’’ இருதயங்களைக் கொண்டவர்கள் மட்டுமே ஆவிக்குரிய வகையில் பலன்மிகுந்த வாழ்வை வாழ முடியும், வாழ்வார்கள் (லூக். 8:15).*

*ஒவ்வொரு நாளிலும் இயேசு இந்த நான்கு வகைப்பட்ட இருதயம் கொண்டவர்களால் சூழப்பட்டிருந்தார். கடின இருதயங்கொண்ட பரிசேயர்கள் கிறிஸ்துவை அகப்படுத்த முயற்சி செய்தார்கள். ஆழமற்ற சிந்தை கொண்ட திரளான கூட்டத்தார் கிறிஸ்துவின் ஊழியம் மற்றும் அற்புதங்களினால் பிடிபட்டு இருந்தார்கள், ஆனால் அவரது ஊழியத்தின் உண்மையான இயல்பைப் புரிந்துகொள்ளத் தவறினார்கள். பிரிவு*

பட்டிருந்த இருதயங் கொண்டவர்களும் இருந்தார்கள் - இதற்கு மாதிரியாக யூதா [ஸ்காரியோத்] இருந்தான், இவன் தனது பணத்தாசையுடன் போராடிக் கொண்டிருந்தான் (யோவா. 12:6ஐக் காணவும்). அவரது முயற்சியைப் பலனுள்ளதாக்கிக் கொண்டிருந்த ஒரு சில உண்மையும் நன்மையுமான இருதயங்களும் அவரைச் சுற்றியிருந்தன.

இயேசு யூதமதத் தலைவர்களால் புறக்கணிக்கப்பட்டிருந்தது ஏன் என்பதை இயேசுவின் சீஷர்களுக்கு விளக்கப்படுத்தும் நடைமுறை நோக்கத்திற்கும் இந்த உவமை பயன்பட்டது. இது, அவர்கள் தங்கள் சொந்த பிரசங்கித்தலைத் தொடங்கவிருந்த எதிர்வரும் நாட்களிலும் ஒரு நடைமுறை நோக்கத்திற்குப் பயன்படுவதாயிருந்தது: இது, சிலர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளுகையில் சிலர் அதை ஏன் ஏற்றுக் கொள்ளுவதில்லை என்பதை விளக்கப்படுத்தும். இந்த உவமையின் செய்தியானது, இன்றைய நாட்களில் வசனத்தைப் போதித்துப் பிரசங்கிக் கின்ற எல்லாருக்கும் இன்னமும் வலிவாக தேவைப்படுவதாக உள்ளது.

**மறைவான வளர்ச்சியின் உவமை (மாற். 4:26-29)**

மாற்கு சுவிசேஷத்தின்படி, இயேசு விதைப்பவன் உவமையைக் கூறிய உடன், அவர் அறுவடைக் காலம் வரையிலும் தானே வளர்ந்த ஒரு விதையைப் பற்றிக் கூறினார்.[22] இது பண்படுத்துதல் தேவைப்படாத பயிர் ஒன்றை நட்டுள்ள எவரொருவருக்கும் நன்கு பழக்கப்பட்ட விவரங்கள் கொண்ட ஒரு எளிய கதையாக உள்ளது.[23] முந்தின உவமையில் போலவே, இதிலும் நிலம் என்பது மனிதரின் இருதயம் என்றும் விதை என்பது சுவிசேஷம் என்றும் நாம் நினைக்கக் கூடும். அநேகமாக இந்த உவமை யானது சீஷர்களை உற்சாகப்படுத்துவதற்காகக் கூறப்பட்டதாக இருக்க வேண்டும்:

- நாம் அறிந்தாலும் அறியாதிருந்தாலும், சுவிசேஷமானது அதனைக் கேட்பவர்களின் இருதயங்களில் செயல்விளைவை ஏற்படுத்துகிறது.
- விதையானது முளைத்து வளர காலத்தை எடுத்துகொள்கிறது, எனவே நாம் பொறுமையாக இருக்க வேண்டியது அவசியமாகிறது.
- விதைத்தல் என்ற பணியில் நாம் உண்மையுடன் நிலைத்திருந்தால் தேவன் நிறைவாக விளைச்சலைக் கொடுப்பார் (1 கொரி. 3:6).

நாற்பத்தி ஏழு ஆண்டுகளுக்கு முன்பு, நான் கிறிஸ்துவின் வாழ்வு பற்றி J. W. இராபர்ட்ஸ் அவர்களின் கீழாகப் படித்துக் கொண்டிருந்தபோது, சகோதரர் இராபர்ட்ஸ் அவர்கள், கர்த்தருடைய சபை இல்லாத இடம் ஒன்றில் சுவிசேஷக் கூட்டம் ஒன்று நடத்திய Gospel Advocate என்ற பத்திரிகையின் ஆசிரியரைப் பற்றிக் கூறினார். மூன்று வாரங்களாக, அந்தப் பிரசங்கியார் உழைத்து, ஒவ்வொரு பிரசங்கத்திலும் தம் இருதயத்தை வெளியில் ஊற்றினார், பதில்கள் பெருக்கெடுக்கும் என்று நம்பி இவ்வாறு செய்தார். ஒரே ஒரு ஞானஸ்நானம் நடைபெற்றது: முகத்தில் தவிட்டு நிறப் புள்ளிகள் கொண்ட ஒரு இளம் பெண் ஞானஸ்நானம் பெற்றாள். அந்தச் சுவிசேஷகர் ஏமாற்ற உணர்வடையாதிருக்கப் போராடினார். ஆயினும்

*விதையானது மெதுவாக, அமைதியாக ஆனால் நிச்சயமாகவே வளர்கிறது என்பதை நினைவில் வையுங்கள். அந்தச் சிறுபெண் வளர்ந்து, திருமணம் முடித்து, ஆறு பையன்களைப் பெற்றாள் - அவர்கள் அனைவரும் சுவிசேஷப் பிரசங்கியார்களானார்கள். "... சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்" (கலா. 6:9; பிர. 11:6ஐக் காணவும்).*

***களைகளைப் பற்றிய உவமை (மத். 13:24-30, 36-43)***

*இயேசு, விதை வளர்தல் பற்றிய இன்னொரு உவமையையும் உரைத்தார்: கோதுமை விதைக்கப்பட்டதற்குச் சற்றுப் பின்பு அவ்வயலில் களைகளை விதைத்த சத்துருவைப் பற்றி அவர் கூறினார். களைகள் என்பவை கோதுமைச் செடியைப் போன்றே இருந்தன, அதிலும் விசேஷமாக வளர்ச்சியின் தொடக்க நிலைகளில் அவை அவ்வாறு இருந்தன.*[24] *அழிவுக்குரிய இந்தச் செயல் கண்டுபிடிக்கப்பட்டபோது, வேலைக்காரர்கள் எஜமானரிடத்தில் வந்து, தாங்கள் அந்தக் களைகளைப் பிடுங்கி எறிந்துவிடலாமா என்று கேட்டார்கள். அந்த வேளையில் இளஞ்செடிகளின் வேர்கள் களைச் செடியின் வேர்களுடன் பின்னிப் பிணைந்திருக்கலாம், எனவே எஜமானர், "வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங் கூட வேரோடே பிடுங்காதபடிக்கு இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள்" என்று கூறினார் (மத். 13:29). அறுவடை வரையிலும் அந்தச் செடிகள் ஒன்றாய் வளரட்டும் என்று அவர்களுக்குக் கட்டளையிட்ட எஜமானர், அறுவடை வேளையில் விரும்பத்தக்க பயிரிலிருந்து விரும்பத்தகாத களையைப் பிரிக்கும்படி உத்தரவிட்டார் (வ. 30).*

*பிற்பாடு சீஷர்கள் கிறிஸ்துவிடத்தில், அந்த உவமையை விளக்கியுரைக்கும்படி கேட்டார்கள் (வ. 36). அவர், சத்துரு பிசாசு என்றும், அறுப்பு உலகத்தின் முடிவு என்றும் கூறினார் (வ. 39). இந்தப் புத்தகத்தில் நியாயத்தீர்ப்பின் கடைசி நாளைப் பற்றி இரண்டு உவமைகள் உள்ளன; அவற்றில் இது ஒன்றாக உள்ளது.*[25] *வசனம் 39 முதல் 43 வரையுள்ள பகுதியானது இரண்டாம் வருகை மற்றும் அதைத் தொடரும் நியாயத்தீர்ப்பு ஆகியவை பற்றி ஒரு விரிவான சித்தரிப்பைத் தருகிறது.*

*சிலர் இந்த உவமையை, சபையில் நமது ஐக்கியத்தில் இருந்துகொண்டு பொல்லாதவைகளைச் செய்பவர்களை நீக்க எவ்வித முயற்சியும் மேற்கொள்ளக்கூடாது என்று இது போதிக்கிறது என்று கூறி, இந்த உவமையை சபை ஒழுங்கு நடவடிக்கைக்கு எதிராக நடைமுறைப் படுத்துவதை மேற்கொள்ள முயற்சி செய்திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட ஒரு விளக்கமானது இயேசு தமக்குத்தாமே முரண்படுவதாக ஒரு கருத்தை ஏற்படுத்தும் (மத். 18:15-18; 1 கொரி. 5:4, 5, 11, 13ஆ ஆகியவற்றையும் காணவும்). J. W. மெக்கார்வீ அவர்கள், "இந்த உவமையும் இதன் விளக்கமும் சிலவேளைகளில் சபை ஒழுங்கு நடவடிக்கைக்கு எதிரான விவாதம் என்ற வகையில் வேண்டப்படுகின்றன, ஆனால் அவற்றைக் குறித்து, அப்படிப் பட்ட பயன்பாடானது தெளிவாகவே தவறானதாக உள்ளது. வயல்/நிலம் என்பது சபையல்ல, ஆனால் அது உலகம் என்பதாக உள்ளது, மற்றும்*

*பொல்லாத மனிதர்களை இல்லாமற்செய்தல் என்ற செயலுக்கு நாம் முயற்சி செய்யக் கூடாது என்பதே இந்த உவமையின் போதனையாக உள்ளது" என்று எழுதினார்.[26] ஜான் கார்ட்டர் அவர்கள் பின்வருமாறு ஒப்புக் கொண்டார்: "... 'ராஜ்யத்தின் புத்திரரும்' 'பொல்லாங்கனின் புத்திரரும்' காலங்களின் முடிவு வரையிலும் இவ்வுலகத்தில் ஒன்றாகவே வாழ வேண்டியுள்ளது. [இந்த உவமையானது] ... சபை தனது உறுப்பினர்களில் முறைமையற்று வாழ்பவர்களையோ அல்லது வெளிப்படையாக அவிசுவாசிகளாய் இருப்பவர்களையோ உறுப்பினராகத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பது கட்டளையாக இருப்பதில்லை என்பது மிகவும் தெளிவாக உள்ளது.'"[27]*

*ஒருவேளை இந்த உவமையானது, மிகவும் அதிகமானவர்கள் ஏற்றுக் கொள்ளாதவர்களாய் இருப்பது ஏன் என்பதை சீஷர்கள் புரிந்துகொள்ள உதவுவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கலாம்: சத்துருவான பிசாசானவன் வேலை செய்கின்றான். இது, அவர்களின் ஊழியத்தினுடைய நீண்ட காலத்திய இயல்பின் தெளிவான காட்சியையும் அவர்களுக்குக் கொடுத்திருக்கலாம்.*

### ***கடுகு விதை மற்றும் புளித்தமா ஆகியவை பற்றிய உவமைகள் (மத். 13:31-33; மாற். 4:30-32)[28]***

*பதிவேடுகளின் விவரப்படி, அந்த நாளில் பேசப்பட்ட எஞ்சிய உவமைகள் மிகவும் சுருக்கமானவைகளாகவும் விளக்கம் இன்றியே தரப்பட்டவைகளாகவும் இருந்தன. அவற்றில் முதலாவது, விதை வளருதல் என்ற கருத்தாய்வின் தொடர்ச்சியாக இருந்தது: இது கடுகு விதையின் உவமையாக இருந்தது. இங்கு இவ்விதையின் அளவானது அதிலிருந்து விளைகிற தாவரத்தின் அளவுடன் ஒப்பிடப்படுதல் என்பது வலியுறுத்தமாக உள்ளது: கடுகு விதையானது மிகவும் சிறியதாக உள்ளது,[29] ஆனால் அது மிகப்பெரிய தாவரத்தை உண்டாக்கிற்று.[30] மீண்டும் ஒருமுறையாக, இந்த உவமையானது அநேகமாக, சீஷர்களை உற்சாகப்படுத்துவதற்காகப் பேசப்பட்டிருக்கலாம்: கிறிஸ்துவின் இயக்கமானது ஒரு சிறிய தொடக்கத் தைக் கொண்டிருந்தாலும், அவர்கள் விதைத்தலின் பணிப்பொறுப்பில் உண்மையாக நிலைத்திருந்தால், அவ்வியக்கமானது அவர்களின் கட்டுக்கடங்காக் கனவுகளுக்கு அப்பாலும் பரந்து வெற்றி அடையும். இந்த உவமைகளின் சத்தியத்தை இன்றைய நாட்களில் ஆப்பிரிக்கா மற்றும் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் காண முடியும்.*

*அடுத்த உவமையில் (புளித்தமா பற்றிய உவமையில்), காட்சி அமைப்பானது, விவசாயி தனது நிலத்தில் விதைக்கும் காட்சியில் இருந்து, பெண்ணொருத்தி தனது வீட்டாருக்காக ரொட்டி தயாரிக்கும் காட்சிக்கு மாறிற்று. அப்பம் சுடுவதற்கு முன்பு, யீஸ்டு கொண்டு பிசையப்பட்ட மாவைப்பற்றி பழக்கம் இல்லாதவர்களுக்கு அதைப் பற்றிய ஒரு விளக்கம் அவசியமானதாக உள்ளது:[31] பெண்ணொருத்தி அப்பம் சுடுவதற்கு முன்பு, மாவின் ஒரு சிறு துண்டைப் பிய்த்து எடுத்து அதை ஒரு வெப்பமான இடத்தில் மூடிவைப்பதுண்டு. அடுத்தமுறை அவள் அப்பம் தயாரிக்கும்*

போது, அவள் இந்தச் சிறுதுண்டை மாவுடன் சேர்த்துப் பிசைந்து அந்த மாவை அப்பம் சுடத் தயாரிப்பது வழக்கம். புளித்தமாவானது, மா முழுவதும் பரவும், அது மாவைப் பொங்கப்பண்ணும். பின்பு அவள் அந்த மாவில் இருந்து சிறிது மாவை பிய்த்தெடுத்து, அடுத்த முறை அப்பம் சுட மாவைத் தயாரிக்க உதவுவதற்கென்று வைத்துக் கொள்வது வழக்கம். [இது நாம் பாலில் உறைமோர் ஊற்றி அதைத் தயிராக்கி, பின்பு அந்தத் தயிரில் இருந்து சிறிது உறைமோர் எடுத்து வைத்து அடுத்தமுறை பாலைத் தயிராக்கப் பயன்படுத்துவதற்கு ஒப்பானதாக உள்ளது.] நேரமாகும்போது, புளித்தமாவின் ஒரு சிறிய பகுதியானது நூற்றுக்கணக்கான, ஆயிரக் கணக்கான அப்பங்களைக் கூடப் புளிப்பேறச் செய்து விடும்.

இந்தக் கற்பனையுரு மாறுபட்டதாக இருந்தபோதிலும், இதன் செய்தியானது அடிப்படையில், கடுகு விதை உவமையின் செய்தியைப் போன்றதாகவே காணப்படுகிறது: வசனமானது தனக்குள்ளாகவே, பரவ மற்றும் வளரக்கூடிய சக்தியைக் கொண்டுள்ளது.[32] இந்த சத்தியம், சுவிசேஷத்தைப் பரப்ப முயற்சி செய்கின்றவர்களை ஊக்கப்படுத்துகிறது. இது இன்றைக்கான சத்தியம் பத்திரிகையில் பணியாற்றுபவர்களுக்கு விசேஷித்த தனிச்சிறப்பான குறிப்புகளைக் கொண்டுள்ளது.

### நிலத்தில் மறைந்துள்ள பொக்கிஷம் மற்றும் விலையேறிய முத்து ஆகியவற்றின் உவமைகள் (மத். 13:44-46)

மத்தேயு 13ல் எஞ்சியுள்ள உவமைகள் சீஷர்களுக்குத் தனியாக உரைக்கப்பட்டவைகளாய் இருக்கலாம் (வ. 36). இவற்றில் முதலாவதாக வருபவை ஒன்றாக உள்ளன: இவ்விரண்டுமே மாபெரும் மதிப்பு உடைய ஒன்றைக் கண்டுபிடித்த மனிதர்களைப் பற்றியதாக உள்ளன. முதலாமவர், தற்செயலாக ஒரு பொக்கிஷத்தைத் தோண்டி எடுத்தார் (வ. 44), இரண்டாமவர் நீண்ட நாட்களாகத் தேடிய விலையுயர்ந்த கல்லைக் கண்டுபிடிக்கின்றார் (வ. 45, 46).[33] இவ்விஷயங்கள் ஒவ்வொன்றிலும், அம்மனிதர் தாம் கண்டறிந்த பொருளின் மதிப்பை உணர்ந்து, அதைப் பெறுவதற்கான விலையைச் செலுத்தினார். இந்த உவமையில் இருந்து பல பாடங்களைத் தரவழைக்க முடியும், ஆனால் இயேசுவைப் பின்பற்றுபவர் களை உற்சாகப்படுத்துதல் என்பது நிச்சயமாகவே ஒரு நோக்கமாக இருந்தது என்பது உறுதி. அவர்களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த அறை கூவலானது அதைச் சந்திப்பதற்கு ஒவ்வொரு தியாகத்தையும் செய்யத் தகுதி வாய்ந்ததாக இருந்தது.

### மீன்பிடி வலையின் உவமை (மத். 13:47-50)

உவமைகளின் வரிசைத் தொடரானது, கலிலேயாக் கடலில் நல்ல மற்றும் மோசமான மீன்கள் எல்லாவற்றையும் சேகரிக்கும் மீன்பிடி வலையைக் கொண்டு மீன்பிடித்தல் பற்றிய ஒரு கதையுடன் முடிவடைந்தது. ஒரு யூதர், "நல்ல" மற்றும் "மோசமான" என்பவற்றைக் கேட்டபோது, அவர் அநேகமாக, "சுத்தமான" மற்றும் "அசுத்தமான" என்பவற்றைப் பற்றி நினைத்திருக்கலாம். அவர் துடுப்புக்களும் செதில்களும்

*உள்ள மீன்களை மட்டுமே உண்பதற்கு அவரை நியாயப்பிரமாணம் அனுமதித்தது (லேவி. 11:9-12). மீன்பிடி வலையானது சுத்தமான மற்றும் அசுத்தமான மீன்களைப் பிடித்ததால், உண்ணத் தகுதியானவைகள் மற்றும் தகுதியற்றவைகளைப் பிரித்தல் என்பது மீனவர்களுக்கு அவசியமானதாக இருந்தது. பிரித்தலின் இந்தச் செயல்முறையை இயேசு கடைசி நியாயத்தீர்ப்புக்கு ஒப்பிட்டார். இந்தக் கருத்துணர்வில், இவ்வுவமையானது களைகளின் உவமையைப் போன்றதாக உள்ளது. இதில் சீஷர்களுக்கு ஒரு கூடுதலான பாடமும் இருந்திருக்கலாம். இயேசு, ''நான் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்'' என்று கூறியிருந்தார் (மத். 4:19). இப்போது ஒருவேளை, அவர்கள் தங்கள் போதனை "பிடித்துக் கொண்டு வரும் மீன்பாடு'' பற்றி வியப்படைய வேண்டாம் என்று அவர் கூறியிருக்கலாம்.*

## *முடிவுரை*

*அந்த நாளில் இயேசு, உவமைகள் என்று பொதுவாக வகைப்படுத்தப் படும் மற்ற விவரிப்புகளில் குறைந்தபட்சம் இரண்டைப் பயன்படுத்தினார்: விளக்குத் தண்டின்மீது வைக்கப்படும் விளக்கு பற்றிய குறிப்பு (மாற். 4:21, 22; லூக். 8:16, 17) மற்றும் ஒரு மனிதன் தன் பொக்கிஷத்திலிருந்து பழையவைகளையும் புதியவைகளையும் எடுத்துக் கொடுத்தலின் உதாரணம் (மத். 13:52). ஆயினும், நாம் இந்தப் பாடத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டியுள்ளது. அடுத்த பாடத்தில் நாம், கலிலேயாக் கடலினூடே கிறிஸ்துவின் பயணம்பற்றியும் அந்தப் பயணத்தில் அடங்கியிருந்த அருஞ்செயல்கள் பற்றியும் படிக்கையில் ''மும்முரமான நாள்'' பற்றிய நமது மறுகண்ணோட்டத்தை முடிப்போம்.*

*இயேசு இந்த உவமைகளைப் பேசிய பின்பு, அவர் தம்மைப் பின்பற்றியவர்களிடத்தில் ஒரு கேள்வியைக் கேட்டார். அவர்களின் பதிலானது என்னைப் புன்சிரிக்க வைக்கிறது. அவர், "இவைகளையெல்லாம் அறிந்துகொண்டீர்களா?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "ஆம்" என்று பதில் அளித்தார்கள் (மத். 13:51). அவர்கள் ஒரு பகுதி புரிந்துகொண்டிருக்கலாம், ஆனால் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகள், அவர்களின் புரிந்து கொள்ளுதல் எல்லைக்கு உட்பட்டிருந்ததைச் சுட்டிக்காண்பிக்கின்றன. நீங்களும் நானும் இந்தப் பாடத்திலிருந்து - மற்றும் இந்தத் தொடரின் எல்லாப் பாடங்களில் இருந்தும் - பயன் அடைய வேண்டுமென்றால், கர்த்தரிடமிருந்து வரும் இரண்டு எச்சரிக்கைகளை நாம் கவனிக்க வேண்டும்: "நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள்'' (மாற். 4:24) மற்றும் ''நீங்கள் கேட்கிற விதத்தைக் குறித்துக் கவனியுங்கள்'' (லூக். 8:18). "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்'' (மாற். 4:9; வ. 23ஐக் காணவும்).*

குறிப்புகள்

[1]மொத்தத்தில் உவமைகளின் "மாபெரும் தொகுப்புகள்" மூன்று உள்ளன. இரண்டாவது தொகுப்பானது லூக்கா 15:1-16:31ல் காணப்படுகிறது. மூன்றாவது தொகுப்பானது மத்தேயு 21:23-22:14லும் மாற்கு மற்றும் லூக்கா சுவிசேஷங்களில் இது தொடர்பான வேத வசனப்பகுதிகளிலும் காணப்படுகிறது. [2]கடன்பட்டவர்கள் இருவரைப் பற்றிய கதையானது வேதவசனப்பகுதியில் ''உவமை'' என்று குறிப்பிடப்படாது இருந்தாலும், இந்தக் கதை ஒரு உவமையே என்று பெரும்பான்மையானவர்கள் ஒப்புக்கொள்ளுகின்றார்கள். [3]கர்த்தரால் பயன்படுத்தப்பட்ட பிற விவரிப்புகளும் "உவமைகள்" என்று குறிப்பிடப்பட முடியும். எடுத்துக்காட்டாக, மத்தேயு 11:16-19 ஒரு உவமை என்று வகைப்படுத்தப்படலாம். [4]கலிலேயாக் கடலருகில் இவ்வேளையில் இயேசுவின் போதனைக்கான ஒரு குறிப்புதான் "உவமைகளினாலேயன்றி, அவர்களோடே பேசவில்லை'' என்ற கூற்றின் அடிப்படை வலியுறுத்தமாயிருந்தது. அதைத் தொடர்ந்து கிறிஸ்து மக்கள் கூட்டத்திற்கு உவமைகளை உரைத்தல் என்பது தவிர மற்ற முறைமைகளைப் பயன்படுத்தி உரையாற்றினார். இருந்தபோதிலும், அந்த வேளையிலிருந்து, அவரது போதனையில் உவமைகள் பெரும்பங்கு வகித்தன. [5]நமது வேத வசனப்பகுதியில் (மத். 13:35ல்) சங்கீதம் 78:2 மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளது. ஆசாப் என்ற சங்கீதக்காரர் கூறியது, இயேசு பிற்பாடு செய்தவற்றின் மாதிரியாக உள்ளது. [6]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 338. [7]F. LaGard Smith, *The Narrated Bible in Chronological Order* (Eugene, Oreg.: Harvest House Publishers, 1984), 1394. [8]H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 147. Hester quoted William Sanday (1843-1920), an English preacher, author and professor at Cambridge. [9]"வசனத்தை முறையாகப் புரிந்துகொள்ளுதல்" என்பது வேத வசனங்களுக்கு எவ்வாறு விளக்கம் தருவது என்பது பற்றிய படிப்பைக் குறிக்கிறது. [10]இது "விரிவாக்கப்பட்ட உருவகம்" என்று விளக்கப்படும் ஒப்புவமைக்கு நேரெதிராக உள்ளது. உருவகம் என்பது "போல" அல்லது "வகையில்" போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தாத ஒரு ஒப்பீடாக உள்ளது.

[11]புதிய ஏற்பாட்டில் "உவமைகள்" என்ற சொற்றொடரின் பரவலான பயன் பாட்டின் காரணமாக, இயேசுவின் உவமைகள் பற்றிய [எந்த] இரு பட்டியல்களும் முற்றிலும் ஒத்துப் போவதைக் காண்பது மிகவும் கடினமானதாக உள்ளது. [12]ஆங்கில மொழியில் ''பழமொழி'' (நாம் மரபுக்கூற்று ஒன்றை ''பழமொழி'' என்று அழைப்போம்) என்றுள்ளது, ஆனால் கிரேக்க வேத வசனத்தில் parabole ("உவமை") என்றே உள்ளது. [13]சட்டப்படி, இயேசுவின் உவமைகள், அவரது உரையைக் கேட்டவர்களால் அவர்களின் குடும்பங்களிலும் வியாபாரங்களிலும் எதிர்கொள்ளப்பட்ட அன்றாட நிகழ்ச்சிகள், சூழ்நிலைகளைப் பற்றியவையாக இருக்கின்றன. சில வேளைகளில் அவர் - அசுத்த ஆவிகளின் உலகம் (லூக். 11:24-26) அல்லது மரித்தவர்களின் நிலை (லூக். 16:19-31) போன்ற - பழக்கத்தில் குறைவான கருத்துக்களைப் பயன்படுத்தினார், ஆனால் உவமைகளில் எதுவும் "தேவதைக் கதைகள்" என்ற வகையில் நோக்கப்படக் கூடாது. அவை யாவும் உண்மை நிலையின் அடிப்படையிலேயே அமைந்திருந்தன. [14]நம்மில் பிரசங்கம் செய்கின்றவர்கள் அநேகமாக மற்றும் எவரைக் காட்டிலும் இச்செயலில் அதிகம் குற்ற உணர்வு உடையவர்களாக இருக்கலாம். [15]''கிறிஸ்துவின் வாழ்வு, 1'' என்ற புத்தகத்தின் இறுதிப்பகுதியில் உள்ள ''பரலோக இராஜ்யம்'' என்ற துணைப்பாடத்தைக் காணவும். [16]John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), 89. [17]யாரோ ஒருவர் இதை "உவமைகளைப் பற்றிய ஒரு உவமை" என்று

*அழைத்துள்ளார். [18]KJV "வழியருகே" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறது (லூக். 8:5). எனது பிரசங்கத்தில் நான் இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்துவேன். [19]இந்த உவமையில் விதைப்பவரைப் பற்றி வலியுறுத்தாமல், நிலங்கள் பற்றி வலியுறுத்தப்படுவதால், விளக்க உரையாளர்களில் சிலர் இது "நிலங்களின் உவமை" என்று அழைக்கப்படலாம் என்பதாக கருத்துத் தெரிவித்துள்ளார்கள். ஆயினும், இயேசு "... விதைக்கிறவனைப் பற்றிய உவமையைக் கேளுங்கள்" என்றே கூறினார் (மத். 13:18). எனவே நாமும் அதே சிறப்புப் பெயரையே பயன்படுத்துகின்றோம். [20]விதைப்பவன் உவமையின் விளக்கம் அந்த உவமையைத் தொடர்ந்து உடனே இடம் பெற்றிருந்தாலும், இயேசு தாமும் தமது சீஷர்களும் ஓய்ந்திருக்கும்படி விலகிச் செல்லுமுன்பு மக்கள் கூட்டத்திற்குத் தமது உவமைகளினாலான உரையை அநேகமாக முடித்திருப்பார். அந்த வேளையில், அவர் விதைப்பவன் உவமையையும் களைகளின் உவமையையும் விளக்கியுரைத்து - பின்பு சீஷர்களுக்கு மாத்திரம் போதிக்க நோக்கங்கொண்ட ஒரு சில உவமைகளைக் கூடுதலாகக் கூறியிருப்பார்.*

*[21]இரண்டே இரண்டு உவமைகளின் (விதைப்பவன் உவமை மற்றும் களைகளின் உவமை) விரிவான விளக்கம் மட்டும் வேதாகமத்தில் பதிவு செய்யப் பட்டிருந்தாலும், மாற்கு 4:34 "அவர் தம்முடைய சீஷரோடே தனித்திருக்கும்போது, அவர்களுக்கு எல்லாவற்றையும் விவரித்துச் சொன்னார்" என்று கூறுகிறது. [22]இந்த உவமை சில வேளைகளில், "தானாகவே வளரும் விதையின் உவமை" என்று அழைக்கப்படுகிறது. [23][பலஸ்தீன நாட்டில்] பெரும்பாலான தானிய வயல்கள் நடுதல் மற்றும் அறுவடை ஆகியவற்றிற்கு இடையில் பண்படுத்தப் (களை எடுக்கப்) படுவது இல்லை. அவைகளுக்கு நீர் பாய்ச்சப்பட்டு உரமிடப்படலாம், ஆனால் பண்படுத்த (களை எடுக்கச்) செய்யப்படும் முயற்சியானது செடிகளை வேருடன் பிடுங்குவதாகிவிடும். [24]எனது* NASB *வேதாகமப் பிரதியில், "களைகள்" பற்றிப் பின்வரும் பக்கக் குறிப்பு உள்ளது:* "Or *darnel,* a weed resembling wheat." *("கோதுமைபோல் தோற்றம் அளிக்கும் ஒரு களைச் செடி"). [25]இன்னொன்று மீன்படி வலையின் உவமையாக உள்ளது. [26]*McGarvey and Pendleton, 339. *[27]*Carter, 132. *[28]உவமைகளின் இந்த வரிசைத் தொடரில் பல ஜோடிகள் ஒன்றுடன் ஒன்றாகப் பொருந்துகின்றன; இது அந்த ஜோடிகளில் ஒன்றாக உள்ளது. [29]"கடுகு விதையானது மற்ற எல்லா விதைகளிலும் சிறியதாக உள்ளது" என்ற இயேசுவின் கூற்றானது அந்தக் காலத்திற்கும் அந்த இடத்திற்கும் நடைமுறைக்கு ஏற்புடையதாக இருந்தது, அது எல்லாக் காலத்திற்கும் எல்லா இடங்களுக்கும் நடைமுறைக்கு ஏற்றதாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. நீங்கள் வாழும் இடத்தில் கடுகு விதை வாங்க முடியுமென்றால், நீங்கள் அவற்றை வாங்கி அவ்விதை எவ்வளவு சிறியதாக உள்ளது என்று உங்கள் உரையைக் கவனிப்பவர்களுக்குக் காண்பிக்க விரும்பலாம். [30]மீண்டும், அந்தக் காலத்திலும் அந்த இடத்திலும் இருந்த கடுகுத் தாவரத்தைப் பற்றி நினைத்துப் பாருங்கள், இது நீங்கள் வாழ்கின்ற இடத்தில் கடுகு விதை வளரும் அதே வழிமுறையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இயேசுவால் குறிப்பிடப்பட்ட கடுகுத் தாவரங்கள் ஒரு குதிரையின் முதுகில் அமர்ந்து இருக்கும் மனிதனின் உயரம் அளவுக்கு வளர்ந்தன என்று* J. W. *இராபர்ட்ஸ் அவர்கள் தமது வகுப்பில் குறிப்பிட்டார்.*

*[31]இந்த நாட்கள், பையில் அடைக்கப்பட்ட ரொட்டிகளும் வீடுகளில் ரொட்டி செய்யும் இயந்திரங்களும் வாங்கப்படுவதற்கு முந்திய நாட்களாய் இருந்தன. [32]சட்டப்படியாக, புதிய ஏற்பாட்டில் புளித்தமா என்பது விரும்பத்தகாத செல்வாக்கு ஒன்றை விவரிப்பதற்கு, மோசமான கருத்தில் பயன்படுத்தப்பட்டது (மத். 16:6; 1 கொரி. 5:6-8; கலா. 5:9). கடுகு விதை மற்றும் புளித்தமா ஆகிய இரு உவமைகளுமே பொல்லாங்கின் சிதிலப்படுத்தும் செல்வாக்கிற்கு எதிராக சீஷர்களை*

*எச்சரிப்பதற்கானவைகளாயிருக்கலாம். ஆயினும் சந்தர்ப்பப் பொருளில், இவ்விரு உவமைகளிலும் ஒரு நேர்மறையான கண்ணோட்டம் நோக்கங் கொண்டுள்ளதாகக் காணப்படுகிறது.* [33]*சிலர் தற்செயலாக சுவிசேஷ "பொக்கிஷத்தை" கண்டறிவதும், மற்ற சிலர் தாங்கள் அதைத் தேடியதால் கண்டறிவதும் எவ்வாறு என்பதற்கு உதாரணங்களைத் தர நீங்கள் விரும்பலாம். ஒருவேளை, மக்கள் தங்கள் நண்பர் அல்லது ஒரு துணையுடன் கொண்டுள்ள நட்புறவினால் சத்தியத்தைத் தாங்கள் உண்மையிலேயே தேடாதபோதே கண்டறிதல் என்பதே மிகவும் பொதுவான வழிமுறையாக இருக்கலாம்.*